අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112784846
isurupaya@moe.gov.lk www.moe.gov.lk

මගේ අංකය / எனது இல. / My Ref. } ED/1/1/6/1 ඔබේ අංකය / உமது இல. / Your Ref. } දිනය / திகதி / Date } 2020.02.18

சுற்றுநிருப இல: - 11/2020

மாகாண கல்விச் செயலாளர்கள்,
மாகண கல்விப் பணிப்பாளர்கள்,
வலய கல்விப் பணிப்பாளர்கள்,
கோட்டப் பொறுப்பு பிரதி/ உதவி கல்விப் பணிப்பாளர்கள்,
பிரிவெனாதிபதிகள்,
பாடசாலை அதிபர்கள்,

.......................................................

அகில இலங்கைப் பாடசாலைச் சிறுவர் சித்திரப் போட்டி - 2020

கல்வி அமைச்சின் அழகியற் கிளையினால் வருடாந்தம் ஒழுங்கு செய்யப்படுகின்ற மேற்படி போட்டிகள் தொடர்பாக இச்சுற்று நிருபத்தில் குறிப்பிடப்படுகின்ற நியதிகளின் பிரகாரம் போட்டிகளை நடாத்துவதற்கு சகல அரச மற்றும் தனியார் பாடசாலைகள் அதிபர்களும், சகல பிரிவெனாதிபதி பிக்குமார்களும், சர்வதேச பாடசாலைகளின் அதிபர்களும் அறிவுறுத்துமாறு அறிவிக்கின்றேன்.

சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்படுகின்றவாறு உரிய போட்டியினை ஒழுங்குபடுத்தி வலயப்போட்டி முடிவுகளை 2020.04.26 ஆம் திகதிக்கு முன்னர் மாகாண கல்வித் திணைக்களத்துக்கும் மாகாண மத்தியஸ்த முடிவுகளை 2020.05.30 ஆந்திகதிக்கு முன்னர் கல்வி அமைச்சின் அழகியற்கிளைக்கும் அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். அகில இலங்கை இறுதிப்போட்டி 2020.07.12 ஆந்திகதி நடாத்துவதற்கு போட்டி ஒழுங்குகள் பற்றிய இறுதி நடவடிக்கை கல்வி அமைச்சின் அழகியற் கல்விக் கிளையினால் மேற்கொள்ளப்படும்.

இவ்வருடம் சகல பாடசாலைகளையும் மையமாக்ககொண்டு பொட்டி வயதுப் பிரவு 16 மற்றும் ஆக்கப்போட்டி நிகழ்ச்சிகள் 43 இன் கீழ் இப்போட்டி நடாத்தப்படும். அதாவது தரம் 1-11 இற்குப் போட்டிப்பிரிவுகள் 15 உம் தரம் 12-13 இற்குப்போட்டிப் பிரிவுகள் 19 உம் விஷேட தேவையுள்ள மாணவர்களுக்கு வயதுப்பிரிவுகள் 09 இன் கீழ் போட்டி நிகழ்ச்சிகள் 09 உம் இடம்பெறும்.

01.1 தரங்களும் போட்டி நிகழ்ச்சிகளும்/ ஊடகமும்

1.1 அட்டவணை

| தரம் | போட்டி நிகழ்ச்சி |
|---|---|
| 1 | 1. கருத்து வெளிப்பாடு |
| 2-3 | 2. கருத்து வெளிப்பாடு |
| 4-5 | 3. கருத்து வெளிப்பாடு |
| 6-7 | 4. கருத்து வெளிப்பாடு |
| | 5. வடிவமைப்பு |
| 8-9 | 6. கருத்து வெளிப்பாடு |
| | 7. வடிவமைப்பு |

ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister } +94112784832 +94112784825 minister.education@moe.gov.lk
ලේකම් / செயலாளர் / Secretary } +94112784811 +94112785162 secretary.education@moe.gov.lk

| | |
|---|---|
| 10-11 | 1. கருத்துவெளிப்பாடு |
| | 2. பாரம்பரிய சித்திரங்களைத் தழுவிய புதிய ஆக்கம் |
| | 3. வடிவமைப்பு |
| | 4. கிரபிக்கு (வரைவியல்) |
| | 5. நிலத்தோற்றம் |
| | 6. பொருள் பார்த்து வரைதல் |
| | 7. காட்டூன் சித்திரம் |
| | 8. கணினி தொடர்பான ஆக்கம் |
| 12-13 | 9. கருத்து வெளிப்பாடு |
| | 10. பாரம்பரியச் சித்திரங்களைத் தழுவிய புதிய ஆக்கம் |
| | 11. மார்பளவு மனித உருவம் (உருவப்படம்) |
| | 12. நிலத்தோற்றம் - பார்த்து வரைதல் |
| | 13. நிலத்தோற்றம் - ஆக்கபூர்வ |
| | 14. பொருள் பார்த்து வரைதல் |
| | 15. பாரம்பரிய சித்திரங்கள் |
| | 16. புதிய ஆக்கபூர்வ வடிவமைப்பு |
| | 17. சுவரொட்டிச் சித்திரம் |
| | 18. விளக்கப்படச் சித்திரம் |
| | 19. புத்தக அட்டை, பொதி உறை மற்றும் மேலுறை |
| | 20. காட்டூன் சித்திரம் |
| | 21. கணினிச் சித்திரம் |

1.2 அட்டவணை

| வயதுப் பிரிவு | போட்டி நிகழ்ச்சி | ஊடகம் |
|---|---|---|
| 4 வருடம் 9 மாதம் - 10 (வருடம் பார்வை சார்ந்த தேவை உடைய மாணவர்கள்) | 22. கருத்து வெளிப்பாடுச் சித்திரம் | விரும்பும் ஊடகம் |
| 10 - 16 (வருடம் பார்வை சார்ந்த தேவை உடைய மாணவர்கள்) | 23. கருத்து வெளிப்பாடுச் சித்திரம் | |
| 16 - 21 (வருடம் பார்வை சார்ந்த தேவை உடைய மாணவர்கள்) | 24. கருத்து வெளிப்பாடுச் சித்திரம் | |
| 4 வருடம் 9 மாதம் - 10 (வருடம் - வேறு தேவை உடைய மாணவர்கள்) | 25. கருத்து வெளிப்பாடுச் சித்திரம் | |
| 10 - 16 வருடம் - வேறு தேவை உடைய மாணவர்கள்) | 26. கருத்து வெளிப்பாடுச் சித்திரம் | |
| 16 - 21 வருடம் - வேறு தேவை உடைய மாணவர்கள்) | 27. கருத்து வெளிப்பாடுச் சித்திரம் | |
| 4 வருடம் 9 மாதம் - 10 வருடம் அறிவு சார்ந்த தேவை தேவை உடைய மாணவர்கள்) | 28. கருத்து வெளிப்பாடுச் சித்திரம் | |
| 10 - 16 வருடம் அறிவு சார்ந்த தேவை தேவை உடைய மாணவர்கள்) | 29. கருத்து வெளிப்பாடுச் சித்திரம் | |
| 16 - 21 வருடம் அறிவு சார்ந்த தேவை தேவை உடைய மாணவர்கள்) | 30. கருத்து வெளிப்பாடுச் சித்திரம் | |

1.3 அட்டவணை

| தரம் | போட்டி நிகழ்ச்சி | ஊடகம் |
|---|---|---|
| 1 | கருத்து வெளிப்பாடு | தாம் விரும்பும் ஊடகத்தைப் பயன்படுத்தும் சுதந்திரம் உண்டு. |
| 2-3 | கருத்து வெளிப்பாடு | |
| 4-5 | கருத்து வெளிப்பாடு | |
| 6-7 | கருத்து வெளிப்பாடு | |
| | வடிவமைப்பு | |
| 8-9 | கருத்து வெளிப்பாடு | |
| | வடிவமைப்பு | |
| 10-11 | கருத்துவெளிப்பாடு | |
| | பாரம்பரிய சித்திரங்களைத் தழுவிய புதிய ஆக்கம் | |
| | வடிவமைப்பு | |
| | கிரபிக்கு (வரைவியல்) | |
| | நிலத்தோற்றம் | |
| | பொருள் பார்த்து வரைதல் | |
| | காட்டூன் சித்திரம் | |
| | கணினி தொடர்பான ஆக்கம் | கணினியை பயன்படுத்துவதன் மூலம் |

| தரம் | போட்டி நிகழ்ச்சி | நீர் வர்ணம் | திட ஊடகம் | கலப்பு ஊடகம் |
|---|---|---|---|---|
| 12-13 | கருத்து வெளிப்பாடு | ✓ | ✓ | ✓ |
| | பாரம்பரியச் சித்திரங்களைத் தழுவிய புதிய ஆக்கம் | தாம் விரும்பும் ஊடகத்தைப் பயன்படுத்தும் சுதந்திரம் உண்டு. | | |
| | மார்பளவு மனித உருவம் (உருவப்படம்) | தாம் விரும்பும் ஊடகத்தைப் பயன்படுத்தும் சுதந்திரம் உண்டு. | | |
| | நிலத்தோற்றம் - பார்த்து வரைதல் | ✓ | ✓ | ✓ |
| | நிலத்தோற்றம் - ஆக்கபூர்வ | தாம் விரும்பும் ஊடகத்தைப் பயன்படுத்தும் சுதந்திரம் உண்டு. | | |
| | பொருள் பார்த்து வரைதல் | ✓ | ✓ | ✓ |
| | பாரம்பரிய வடிவமைப்பு | ✓ | ✓ | ✓ |
| | புதிய ஆக்கபூர்வ வடிவமைப்பு | ✓ | ✓ | ✓ |
| | சுவரொட்டிச் சித்திரம் | ✓ | ✓ | ✓ |
| | விளக்கப்படச் சித்திரம் | ✓ | ✓ | ✓ |
| | புத்தக அட்டை, பொதி உறை மற்றும் | ✓ | ✓ | ✓ |

| | | |
|---|---|---|
| | மேலுறை | |
| | காட்டூன் சித்திரம் | தாம் விரும்பும் ஊடகத்தைப் பயன்படுத்தும் சுதந்திரம் உண்டு. |
| | கணினிச் சித்திரம் | கணினியைப் பயன்படுத்துவதன் மூலம். |

02. போட்டியில் பங்குபற்றல்

- தரம் 10-11 – 2019 ஆம் ஆண்டில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களும் இப்பிரிவில் அடங்குவர்.
- தரம் 12-13 – 2019 ஆம் ஆண்டில் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களும் இப்பிரிவில் அடங்குவர்.

விஷேட பிரிவு மாணவ மாணவிகளுக்கு கீழ் குறிப்பிடப்படுகின்றவாறு பிரிவுகள் வேறுபடும்.

- பார்வை சார்ந்த தேவை – முழுமையான குருட்டுத்தன்மையுடைய பிள்ளைகள் அடங்குவர்
- அறிவு சார்ந்த தேவை – டவுன்ஸ் சின்ரம், ஓட்டிசம், மெதுவான மனவளர்ச்சி ஏற்படும் பிள்ளைகள் அடங்குவர்.
- வேறு – தசைக்கோளாறு, உடற்குறைபாடு (உடற்குறைபாடு எனும் போது சாதாரணமாக இருகால்களும் அமைந்திருக்காத பிள்ளைகளும் அடங்குவர்)

தரம் 1-11 ஐச் சேர்ந்த மாணவர்களுக்கு, கணினி வழிச் சித்திரங்களில் தவிர்த்து தமது விருப்பின்பேரில் எந்தவோர் ஊடகத்தையும் பயன்படுத்த முடிவதோடு, 12, 13 ஆகிய தரங்களுக்காக (கணினிச் சித்திரங்களில் தவிர்த்து) மேற்படி ஊடகங்களுக்கமைய போட்டி நிகழ்ச்சிகள் வேறுபடும். (ஊடகம் பற்றி கீழே விரிவாக விளக்கப்பட்டுள்ளது) (1.3 அட்டவணையைப் பார்க்க)

நீர் வர்ணம் :
ஊடுகாட்டும் தன்மையுடையதாகப் பயன்படுத்தக்கூடிய நீர்வர்ணம், எக்ரலிக் போன்ற ஊடகங்களை ஊடுகாட்டும் தன்மையுடையதாகப் பயன்படுத்தல்.

திட ஊடகம் :
நீர்வர்ணம், எக்ரலிக், எண்ணெய் வர்ணம், போஸ்டர் வர்ணம், கொலாஜ்/ பப்ரிக் வர்ணம், பேனை, பென்சில் போன்ற ஊடகங்களைப் ஊடு காட்டாத வகையில் பயன்படுத்தல்.

**கலப்பு ஊடகங்கள்:**
பல்வேறு குணவியல்புகளுடன் கலப்பு ஊடகமாக பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி, ஒட்டுதல், சுரண்டுதல், பூசுதல் போன்ற நுட்ப முறைகளைப் பயன்படுத்தல்.
(கொலாஜ் (ஒட்டுச்) சித்திர நுட்பமுறையின் கீழ் இருபரிமாண மேற்பரப்பில் ஊடகத்தையும் பொருள்களையும் பயன்படுத்தல்.)

விரும்பிய ஊடகத்தைப் பயன்படுத்தல்:
நீர் வர்ணம், திட ஊடகம், கலப்பு ஊடகம் போன்ற எந்தவோர் ஊடகத்தையும் பயன்படுத்தும் சுதந்திரம் உண்டு.

விஷேட பிரிவு மாணவர்களுக்கு கருத்து வெளிப்பாட்டுச் சித்திரம் மாத்திரம் சமர்ப்பிக்க முடியும். அதற்கு விரும்பிய எந்தவொரு ஊடகத்தையும் பயன்படுத்த முடியும்.
விஷேட பிரிவு மாணவர்களுக்கு கருத்து வெளிப்பாட்டுச் சித்திரம் மாத்திரம் சமர்ப்பிக்க முடியும் அதற்கு விரும்பிய எந்த ஊடகத்தையும் பயன்படுத்தலாம்.

3.0 போட்டி ஒழுங்கமைப்பும் கட்டமைப்பும்.

3.1 போட்டிக் கட்டங்கள்

3.1.1 அகில இலங்கை பாடசாலைச் சிறுவர் சித்திர விழா ஒழுங்கமைப்பானது ஐந்து கட்டங்களைக் கொண்டது.

1. முதலாம் கட்டம்:- வலய மட்டம் (கல்வி வலயப் பாடசாலை சிறுவர்களுக்கு இடையிலான சித்திரப் போட்டியும் மத்தியத்தமும்)
2. இரண்டாம் கட்டம்:- மாகாண மட்டம் (மாகாணம் வலங்களுக்கு இடையிலான சித்திர மத்தியத்தம்)
3. மூன்றாம் கட்டம்:- தேசிய மட்டம் (தேசிய மட்ட போட்டிக்காக மாகணங்களுக்கு மத்தியத்தம்)
4. நான்காம் கட்டம்:- தேசிய மட்ட போட்டி
5. ஐந்தாம் கட்டம்:- தேசிய மட்டத்திலான மத்தியத்தம்

**வலய, மற்றும் மாகாண மட்டத்திலிருந்து தேசிய மட்டத்துக்காகத் தெரிவு செய்ய வேண்டிய மாணவர் ஆக்கங்களின் எண்ணிக்கை**

3.1 அட்டவணை

| விஷேட பிரிவு | போட்டி நிகழ்ச்சி | ஊடகம் | ஒரு வலயத்திலிருந்து தெரிவு செய்யும் சித்திரங்களின் தொகை | வலயங்களிலிருந்து மாகாணப் போட்டிக்கு அனுப்பப்படும் சித்திரங்களின் தொகை | தேசிய மட்டத் தீர்ப்புக்காக அனுப்பப்படும் சித்திரங்களின் தொகை |
|---|---|---|---|---|---|
| 4 வருடம் 9 மாதம் - 10 வருடம் பார்வை குறைபாடு | 29. கருத்து வெளிப்பாடுச் சித்திரம் | (விரும்பிய ஊடகம்) | 10 | 10 | 90 (10x9) |
| 10 - 16 வருடம் பார்வை குறைபாடு | 30. கருத்து வெளிப்பாடுச் சித்திரம் | (விரும்பிய ஊடகம்) | 10 | 10 | 90 (10x9) |
| 16 - 21 வருடம் பார்வை குறைபாடு | 31. கருத்து வெளிப்பாடுச் சித்திரம் | (விரும்பிய ஊடகம்) | 10 | 10 | 90 (10x9) |
| 4 வருடம் 9 மாதம் - 10 வருடம் அறிவு சார்ந்த தேவை | 32. கருத்து வெளிப்பாடுச் சித்திரம் | (விரும்பிய ஊடகம்) | 10 | 10 | 90 (10x9) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10 - 16 வருடம் அறிவு சார்ந்த தேவை | 33. கருத்து வெளிப்பாடுச் சித்திரம் | (விரும்பிய ஊடகம்) | 10 | 10 | 90 (10x9) |
| 16 - 21 வருடம் அறிவு சார்ந்த தேவை | 34. கருத்து வெளிப்பாடுச் சித்திரம் | (விரும்பிய ஊடகம்) | 10 | 10 | 90 (10x9) |
| 4 வருடம் 9 மாதம் - 10 வருடம் வேறு | 35. கருத்து வெளிப்பாடுச் சித்திரம் | (விரும்பிய ஊடகம்) | 10 | 10 | 90 (10x9) |
| 10 - 16 வருடம் வேறு | 36. கருத்து வெளிப்பாடுச் சித்திரம் | (விரும்பிய ஊடகம்) | 10 | 10 | 90 (10x9) |
| 16 - 21 வருடம் வேறு | 37. கருத்து வெளிப்பாடுச் சித்திரம் | (விரும்பிய ஊடகம்) | 10 | 10 | 90 (10x9) |

3.2 அட்டவணை

| தரம் | போட்டி நிகழ்ச்சி | ஊடகம் | ஒரு வலயத்தி லிருந்து தெரிவு செய்யும் சித்திரங் களின் தொகை | வலயங்களி லிருந்து மாகாணப் போட்டிக்கு அனுப்பப் படும் சித்திரங் களின் தொகை | தேசிய மட்டத் தீர்ப்புக் காக அனுப்பப்படும் சித்திரங் களின் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | கருத்து வெளிப்பாடு | விரும்பிய ஊடகம் | 25 | 25 | 225 (25x9) |
| 2-3 | கருத்து வெளிப்பாடு | விரும்பிய ஊடகம் | 60 | 60 | 540 (60x9) |
| 4-5 | கருத்து வெளிப்பாடு | விரும்பிய ஊடகம் | 50 | 50 | 450 (50x9) |
| 6-7 | கருத்து வெளிப்பாடு | விரும்பிய ஊடகம் | 50 | 50 | 450 (50x9) |
| | வடிவமைப்பு | விரும்பிய ஊடகம் | 50 | 50 | 450 (50x9) |
| 8-9 | கருத்து வெளிப்பாடு | விரும்பிய ஊடகம் | 50 | 50 | 450 (50x9) |
| | வடிவமைப்பு | விரும்பிய ஊடகம் | 50 | 50 | 450 (50x9) |
| 10-11 | கருத்துவெளிப்பாடு | விரும்பிய ஊடகம் | 50 | 50 | 450 (50x9) |
| | பாரம்பரிய சித்திரங்களைத் தழுவிய புதிய | விரும்பிய ஊடகம் | 25 | 25 | 225 (25x9) |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஆக்கம் | | | | | | |
| | வடிவமைப்பு | விரும்பிய ஊடகம் | | | 50 | 50 | 450 (50x9) |
| | கிரபிக்கு (வரைவியல்) | விரும்பிய ஊடகம் | | | 25 | 25 | 225 (25x9) |
| | நிலத்தோற்றம் | விரும்பிய ஊடகம் | | | 25 | 25 | 225 (25x9) |
| | பொருள் பார்த்து வரைதல் | விரும்பிய ஊடகம் | | | 50 | 50 | 450 (50x9) |
| | காட்டூன் சித்திரம் | விரும்பிய ஊடகம் | | | 15 | 15 | 135 (15x9) |
| | கணினி தொடர்பான ஆக்கம் | விரும்பிய ஊடகம் | | | 10 | 10 | 90 (10x9) |
| | | நீர்வர்ணம் | திட ஊடகம் | கலப்பு ஊடகம் | | | |
| 12-13 | கருத்து வெளிப்பாடு | 20 | 20 | 20 | 60 | 60 | 540 (20x3x9) |
| | பாரம்பரியச் சித்திரங்களைத் தழுவிய புதிய ஆக்கம் | 20 | | | 20 | 20 | 180 (20x9) |
| | புதிய ஆக்கபூர்வ வடிவமைப்பு | 60 | | | 60 | 60 | 540 (60x9) |
| | நிலத்தோற்றம் - பார்த்து வரைதல் | 20 | 20 | 20 | 60 | 60 | 540 (20x3x9) |
| | நிலத்தோற்றம் - ஆக்கபூர்வமானது | 20 | | | 20 | 20 | 180 (20x9) |
| | பொருள் பார்த்து வரைதல் | 10 | 10 | 10 | 30 | 30 | 270 (10x3x9) |
| | பாரம்பரிய சித்திரங்கள் | 30 | | | 30 | 30 | 270 (30x9) |
| | உருவப்படச் சித்திரம்/ தழுவிய புதிய ஆக்கம் | 30 | | | 30 | 30 | 270 (30x9) |
| | சுவரொட்டிச் சித்திரம் | 15 | | | 15 | 15 | 135 (15x9) |
| | விளக்கப்படச் சித்திரம் | 15 | | | 15 | 15 | 135 (15x9) |
| | புத்தக அட்டை பொதி உறை, மேலுறை | 15 | | | 15 | 15 | 135 (15x9) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | காட்டூன் சித்திரம் | 10 | 10 | 10 | 90 (10x9) |
| | கணினிச் சித்திரம் | கணினிப் பயன்பாடு 10 | **10** | 10 | 90 (10x9) |

4.0 **சித்திரப் போட்டி தொடர்பான வலயமட்ட ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளும் கருமப் பொறுப்புக்களும்**

தமது கல்வி வலய பாடசாலைகளில் கல்வி கற்கின்ற மாணவர்களை இப்போட்டியில் பங்குபற்றச் செய்வது, அந்தந்தக் வலயக் கல்விப் பணிப்பாளர்களினதும், வலயத்தின் சித்திரக் கலைப் பாடத்திற்குப் பொறுப்பு பணிப்பாளர்களதும், உ.க.ப/ பி.க.பணிப்பாளர்களினதும் அழகியல் பாடப்பொறுப்பு பி.க.ப/ உ.க.பணிப்பாளர்களினதும், சித்திரக் கலை ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்களதும் அவ்வப் பாடசாலைகளின் அதிபர்களதும் பொறுப்பாகும்.

4.1 அகில இலங்கை மட்டச் சித்திரப் போட்டியின் ஒவ்வொரு போட்டி நிகழ்ச்சியிலும் பங்குபற்றும் மாணவ மாணவியர்களது படைப்பாக்கங்களை முன்வைப்பதற்குரிய இறுதித் திகதி 2020.03.20 ஆந் திகதியாவதோடு, அதற்கமைய இலங்கையின் சகல கல்வி வலயங்களையும் சேர்ந்த பாடசாலைகளில் பூர்த்தி செய்யப்பட்ட மாணவர்களது சித்திர ஆக்கங்களை 2020.03.20 ஆந் திகதிக்கு முன்னர் அப்பாடசாலைகள் அமைந்துள்ள வலயக் கல்வி அலுவலகத்துக்கு தருவித்துக் கொள்வதற்கு ஆவண செய்தல் வேண்டும்.

4.2 பாடசாலைகளினால் வலயத்துக்கு அனுப்பப்படும் மாணவர் ஆக்கங்களின் பின்புறத்ததே கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள உபஅட்டவணை இலக்கம் 1 இல் தரப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தை பூர்த்திசெய்து ஒட்டுதலும் அதில் அதிபரின் பதவி முத்திரையைப் பொறிப்பதும் கட்டாயமானது. **விஷேட பிரிவின் ஆக்கத்துடன் சமர்ப்பிக்கின்ற இலக்கம் 01 விண்ணப்பப்படிவத்துடன் விஷேட தேவையுடைய மாணவன் என உறுதிப்படுத்தும் வைத்தியச் சான்றிதழ் அல்லது அது பற்றிய குறிப்பொன்றினை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்டு, கழராதவாறு மாகாண, தேசிய மட்டத்துக்கு அனுப்பப்படும் வரை இக்குறிப்பு சித்திரத்துடன் இருத்தல் வேண்டும்.**

4.3 வலயப் போட்டிகளுக்கான ஆக்கங்களைத் தெரிவுசெய்யும்போது அம்மத்தியஸ்தக் குழுவை, இச்சுற்றுநிருபத்தின் 5.1 இன்படி மேற்கொள்ளல் வேண்டும் சுற்று நிருபத்தின் நிபந்தனைகளைத் தாண்டாத வகையில் வலயமட்டப்போட்டிப் பெறுபேறுகளின் இறுதித் தீர்மானிப்பாளர் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆவார்.

4.4 அந்தந்தப் போட்டி நிகழ்ச்சிக்காக, வலய மட்டப் போட்டிகளின் (6.1 நியதியைப் பார்க்க) பெறுபேற்றுப் பட்டியல்களை 2020.05.10 ஆந் திகதிக்கு முன்னர் மாகாணத்துக்கு அறிவித்தல் வேண்டும். உரிய வலய மட்டப் பெறுபேற்றுப் பட்டியலைத் தயாரிக்கும்போது வெற்றி பெற்ற மாணவர்கள் பெயர்ப் பட்டியலை இரண்டு பிரதிகளில் தயாரித்து, வலயக் கல்விப் பணிப்பாளர் உறுதிப்படுத்தி, அவற்றுள் ஒன்றை வெற்றி பெற்ற குறித்த ஆக்கங்களுடன் மாகாணக் கல்விப் பணிமனையின் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும், மற்றைய பிரதியை கல்வி அமைச்சின் அழகியற் கல்விப் பணிப்பாளருக்கும் அனுப்பி வைத்தல் வேண்டும். தெரிவு செய்யப்பட்ட சகல சித்திரங்களதும் பின்புறத்தில் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள உபஅட்டவணை இலக்கம் 02 விண்ணப்பப் படிவத்தை

ஒட்டுவதும், அதில் வலயக் கல்விப் பணிப்பாளரின் **பதவி முத்திரையைப் பொறிப்பதும் கட்டாயமானது.**

4.5 வலய மட்டப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்குச் சான்றிதழ்கள் வழங்கும் பொறுப்பு அந்தந்த வலயக்கல்வி அலுவலகங்களினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கும் ஏனைய வெற்றிகளுக்கும் விசேட விருதுகள் வழங்கப்பட வேண்டும். தமது மாகாணத்திலிருந்து தேசிய மத்தியஸ்தத்துக்கு அனுப்பப்படுகின்ற சகல மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படவேண்டும்.

5.0 சித்திரப் போட்டி தொடர்பாக மாகாண மட்ட ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளும் பொறுப்புக்களும்

5.1 மாகாணக் கல்விப் பணிப்பாளரது அறிவுறுத்தல்களின்படி, தமது அதிகாரப் பிரதேசத்தில் அடங்கியுள்ள சகல கல்வி வலயங்களையும் சேர்ந்த பாடசாலைகளிலிருந்தும் மாணவர்களது சித்திர ஆக்கங்களைத் தருவித்துக் கொள்ளல், தெரிவு செய்தல் ஆகிய நடவடிக்கைகளை ஒழுங்கு செய்து மேற்பார்வை செய்தல் வேண்டும். என்பதுடன் தேசிய மட்டத்துக்கு அனுப்புவதற்கான மத்தியத்தம் மாத்திரம் மேற்கொண்டு அட்டவணை பிரகாரம் கல்வி அமைச்சின் அழகியல் பணிப்பாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

(வலய மட்டத்தில் தெரிவு செய்யப்படும் சித்திர ஆக்கங்களும் பெறுபேற்றுப் பட்டியலும் ஒன்றுக்கொன்று சமமானது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.) 6.1 நிபந்தனையைப் பார்க்கவும். 3.1, 3.2 அட்டவணைகளில் வெற்றிபெற்றோர் பெயர்ப்பட்டியலை கல்வி அமைச்சின் அழகியல் பிரிவு கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கவும்.

5.2 மாகாணத்தில் அடங்கியுள்ள வலயங்களுக்கு இடையே வெற்றிபெற்ற மாணவ மாணவியர்களது ஆக்கங்களை மாகாண மட்டத்துக்காகத் தெரிவு செய்யும் பணி, மாகாணக்கல்விப் பணிப்பாளரினது அறிவுறுத்தலின் பேரில் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப் பட்டுள்ள மாகாண அழகியல் பணிப்பாளரின் ஒழுங்கமைப்பில் மேற்கொள்ளல் வேண்டும். வெற்றி பெற்ற மாணவ மாணவிகளின் பெயர்ப்பட்டியல் அவர்களுக்கு மாகாண கல்வி அலுவலகத்தின் மூலம் அறிவிக்கப்படல் வேண்டும் என்பதோடு, இறுதிச் சுற்றுக்கு தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கு சான்றிதழ் வழங்குவது அந்த அந்த மாகாணக் கல்வி அலுவலகங்களினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கும் ஏனைய வெற்றிகளுக்கும் விசேட விருதுகள் வழங்கப்பட வேண்டும்.

5.3 மாகாண மட்டப் போட்டிகளுக்காக வலயங்களிலிருந்து ஆக்கங்களைத் தெரிவு செய்யும் போது அதற்கான மத்தியத்தக் குழுவை இச்சுற்று நிருபத்தின் 3.1 மற்றும் 3.2 அட்டவணைகளில் காட்டப்படும் எண்ணிக்கையின் பிரகாரம் தெரிவு செய்து கொள்ளல் வேண்டும்.

5.4 தேசிய மட்ட மத்தியத்திற்கு ஆக்கங்களைத் தெரிவு செய்வதற்காக இடம்பெறும் மாகாண சித்திர மத்தியத்தம் செய்வது மாகாண கல்விப் பணிப்பாளரின் ஆலோசனைப்படி மாகாண அழகியல் பணிப்பாளர் சித்திரக்கலை பி.க.ப/ சித்திரக் கலை உ.க. பணிப்பாளர் பொறுப்பாகும்.

06. அகில இலங்கை பாடசாலைச் சிறுவர் சித்திர விழா நடாத்தப்படும் திகதிகள்

6.1 பின்வரும் திகதிகளில், அகில இலங்கை பாடசாலைச் சிறுவர் சித்திர விழா வெவ்வேறு கட்டங்களை ஒழுங்கு செய்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| முதலாம் கட்டம் | : | 2020.03.20 ஆந்திகதிக்கு முன்னர் பாடசாலையினால் மாணவரது ஆக்கங்களைத் பாடசாலை அடங்கியுள்ள வலயத்துக்கு அனுப்பி வைத்தல். |
| இரண்டாம் கட்டம் | : | வலய மத்தியத்தத்தின் மூலம் ஆக்கங்களைத் தெரிவு செய்தலும் அவ்வாறு தெரிவு செய்த மாணவ மாணவிகளை, கல்வி வலயத்தில் தெரிவு செய்த ஓர் இடத்துக்கு அழைத்து, வலய மட்டச் சித்திரம் வரையும் போட்டியை **2020.04.26** ஆந் திகதிக்கு முன்னர் நடாத்துதல். |
| மூன்றாம் கட்டம் | : | 2020.05.10 ஆந் திகதிக்கு முன்னர் வலயப் பெறு பேற்றுப் பட்டியலையும் குறித்த ஆக்கங்களையும் மாகாண அழகியற் கல்விப் பணிப்பாளரிடம் ஒப்படைத்தல். |
| நான்காம் கட்டம் | : | 2020.05.30 ஆந் திகதிக்கு முன்னர் மாகாண மட்டத்தில் மத்தியத்தம் மேற்கொண்டு பெறுபேற்று அட்வணையை கல்வி அமைச்சின் அழகியற் கிளைப் பணிப்பாளருக்கு கையளித்தல். |
| ஐந்தாம் கட்டம் | : | 2020.06.07 நிலத்தோற்றம் வரையும் தேசிய மட்ட இறுதிப்போட்டிக்கு சித்திரங்களைத் தெரிவு செய்வதற்காக இடம்பெறும் முதனிலை மத்தியஸ்தம். |
| ஆறாம் கட்டம் | : | 2020.06.13 - நிலத்தோற்றச் சித்திரம் வரையும் தேசிய மட்டப் போட்டி |
| ஏழாம் கட்டம் | : | 2020.07.12 ஏனைய போட்டிகளுக்கான இறுதிப் போட்டியினை தேசிய மட்டத்தில் நடத்துதல். |

07 போட்டி நிகழ்ச்சி மத்தியத்தமும் மதிப்பீடும்

07.1 வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு இடையே போட்டி மத்தியத்தம் செய்வதற்காக, வலயக் கல்விப் பணிப்பாளரின் மேற்பார்வையின் கீழ், மாகாணக்கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன், தமது வலயத்தின்/ மாகாணத்தின் அழகியல் அல்லது சித்திரக்கலை தொடர்பான உத்தியோகத்தர்களின் சிபாரிசின் பேரில் நிபுணத்துவமுள்ள தேர்ச்சிமிக்க வளவாளர் களைத் தெரிவு செய்துகொள்வதோடு, அவ்வாறு தெரிவு செய்யப்பட்டோரது பெயர், பதவி, தகைமைகள் போன்ற விவரங்களை வலய மட்ட மத்தியத்தத்துக்கு முன்னர், கல்வி அமைச்சின் மாகாண கல்விப் பணிப்பாளரின் அனுமதிக்காக அனுப்பிவைத்தல் வேண்டும்.

07.2 குறித்த வலயத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் போட்டிகளின் மத்தியத்தத்துக்காக அவ்வலயத்தைச் சேர்ந்த சித்திரக்கலைப் பாடப் பொறுப்புப் பணிப்பாளர்கள் அல்லது ஆசிரிய ஆலோசகர்களைப் பயன்படுத்தாது, அருகில் உள்ள வலயத்தைச் சேர்ந்த சித்திரக்கலைப் பாடப் பொறுப்பதிகாரிகள், ஆசிரிய ஆலோசகர்கள் உட்பட மூன்று பேர் கொண்ட மத்தியத்தர் குழுவொன்றைப் பயன்படுத்தல் வேண்டும்.

07.3 ஒன்பது மாகாணங்களுக்கிடையில் தெரிவு செய்யப்பட்ட ஆக்கங்களை கல்வி அமைச்சுக்கு அனுப்பியதன் பின்னர் மத்தியத்தம் செய்தல் தேசிய மட்டத்தில் மேற்கொள்ளப்படும். முதனிலை மத்தியத்தம் மேற்கொள்ளப்பட்டு 8.1, 8.2 மற்றும் 8.3 அட்டவணைகளுக்கு ஏற்ப மாணவர்களை அழைத்து போட்டிகளை நடாத்தி இறுதி மத்தியத்தம் நடாத்தப்படும்.

07.4 இறுதிப் போட்டி மத்தியத்தக் குழுவின் கட்டமைப்பு தொடர்பாக, கல்வி அமைச்சின் சித்திரக்கலைப் பாடத்துக்குப் பொறுப்பான பணிப்பாளரது ஆலோசனையின் பேரில் அழகியற் கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் தீர்மானிக்கப்படும். மேலும் யாதேனும் போட்டித் தலைப்பு தொடர்பாக விடயஞ்சார்ந்த பிரசினமொன்று தோன்றியுள்ள சந்தர்ப்பத்தில் அது தொடர்பாக யாதேனும் தீர்மானம் எடுத்தல் வேண்டும் எனத் தோன்றுமிடத்து மாத்திரம் கல்வி அமைச்சுச் செயலாளரின் இணக்கப்பாட்டுடன் மத்தியத்தர் குழுவுடன் கலந்துரையாடி, தீர்மானம் மேற்கொள்வது கட்டாயமாகும்.

07.5 அண்மித்த வருடத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுக் கொண்ட மாணவர்களும் போட்டியில் பங்குபற்ற முடியும். அண்மித்த வருடத்தில் வெற்றிபெற்ற ஆக்கமொன்றை இவ்வருடமும் அதே விதத்திலே சமர்ப்பிக்க முடியாது. அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் ஆக்கம் போட்டியிலிருந்து நீக்கப்படும்.

07.6 போட்டி மத்தியத்தத்தின் போது அந்தந்தப் போட்டி நிகழ்ச்சிக்காக, பின்வரும் நியமங்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டை நடாத்துதல் வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

- **கருத்துவெளிப்பாட்டுச் சித்திரங்கள்**

தரம் 1 தொடக்கம் தரம் 13 வரையிலான மாணவ மாணவிகளுக்கு இப்போட்டி நிகழ்ச்சியில் பங்குபற்றலாம். தரம் 1 – 11 வரை விரும்பிய ஊடகங்களில் சமர்ப்பிக்க முடியும். தரம் 12 - 13 ஆகியவற்றுக்காக இப்போட்டி நிகழ்ச்சிகளை நீர் வர்ணம், திட ஊடகம், கலப்பு ஊடகம் ஆகிய பிரிவு களின் கீழ் முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. இப்போட்டி நிகழ்ச்சிகளுக் காகப் பின்வரும் நியமங்கள் அடிப்படையாகக் கொள்ளப்படும்.

நியமங்கள்:

* தலைப்புக்குப் பொருத்தமான சூழ் நிலையையும் சூழலையும் காட்டல்
* வெளியில் உருவங்களை வரைந்துள்ள விதம்
* பாணிக்குரிய கோட்பாடுகளின் பயன்பாடு
* ஊடகங்கள் மற்றும் நுட்பமுறைகளைப் பயன்படுத்தும் திறன்
* பாவ வெளிப்பாடும் சிறப்பான முழுநிறைவும்

- **பாரம்பரியமான சித்திரங்களைத் தழுவிய புதிய ஆக்கங்கள்**

உலகின் புராதனப் பாரம்பரியங்களை தழுவிச் செய்யப்படும் புதிய படைப்பாக்கங்கள் இவ்வகையைச் சேர்ந்தவையாகும். உதாரணம்: அநுராதபுர, பொலன்னறுவைக்கால ஓவியங்கள், கண்டிக்கால ஓவியங்கள், இந்தியாவின் மொகலாய மற்றும் ராஜ்புட் மரபுச் சித்திரங்கள், எகிப்து மற்றும் கிரேக்க ஓவியங்களின் இயல்புகள் போன்றவற்றைத் தழுவிப் படைத்த புதிய ஆக்கங்களே இதன் மூலம்

எதிர்பார்க்கப்படுகின்றது. 10-11 மற்றும் 12-13 ஆந்தர மாணவ மாணவியர் இப்போட்டி நிகழ்ச்சியில் பங்குபற்றலாம். புார்த்து எழுத அல்லது பிரதி பண்ண முடியாது. இப்படைப்பாக்க நிகழ்ச்சியைத் தாம் விரும்பிய ஊடகத்தினைப் பயன்படுத்தி முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்கப் பட்டுள்ளது. இந்த ஆக்கங்களை மதிப்பீடு செய்தவற்காகப் பின்வரும் நியமங்கள் அடிப்படையாகக் கொள்ளப்படும்.

நியமங்கள்:

* தலைப்புக்குப் பொருத்தமான சூழ் நிலையையும் சூழலையும் காட்டல்
* வெளியில் உருவங்களை வரைந்துள்ள விதம்
* பாணிக்குரிய கோட்பாடுகளின் பயன்பாடு
* ஊடகத்தையும் நுட்பமுறைகளையும் பயன்படுத்தும் திறன்
* புதுமைப்பாடும் சிறப்பான நேர்த்தியான நிறைவும்.

• **உருவப்படச் சித்திரங்கள்(மார்பளவுப் படங்கள்)**

12-13 ஆந்தர மாணவ மாணவியர்கள் உருவப்படம் வரையும் போட்டி நிகழ்ச்சியில் பங்குபற்றலாம். இந்தப் போட்டி நிகழ்ச்சி ஆக்கத்தை, தாம் விரும்பிய ஊடகத்தில் முன்வைக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. பாடசாலை மட்டத்திலும் வலய மட்டத்திலும் அச்சிடப்பட்ட பிரதியை அல்லது ஒளிப்படத்தை (Photograph) பார்த்து வரையச் சந்தர்ப்பமளிக்கப் படுவதோடு, மாகாண முதனிலை மத்தியத்தம் மூலம் தேசிய மட்ட மதிப்பீட்டுக்கு தெரிவு செய்யப்பட்டு அனுப்பப்படும் மாணவர்கள் (9 மாகாணங்களிலும்) தேசிய மட்டத்தில் முதல் நிலை மத்தியத்தின் போது 60 பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் கொழும்புக்கு வரவழைக்கப்பட்டு சித்திரம் வரைவதற்கு கல்வி அமைச்சின் ஊடாக ஒழுங்கு செய்யப்படும். அவர்கள் மாகாண சுற்றுக்காக மாகாணத்துக்கு அழைக்கப்பட்டு சித்திரம் வரைதல் இடம்பெறாது. அதன் போது பார்த்து வரைவதற்காக, உயிர் நிலை மாதிரி ஒன்று வழங்கப்படுவதோடு அவ்வாக்கத்தை மத்ததியத்தம் செய்வதற்காக பின்வரும் நியமங்கள் அடிப்படையாக கொள்ளப்படும்.

நியமங்கள்:

* பாத்திரத்தையும் இயல்புகளையும் காட்டல்
* அளவுப் பிரமாணப்படி வரைதல்
* முப்பரிமாணத் தன்மையும் இயல்புகளை நுணுக்கமாகக் காட்டலும்
* ஊடகத்தையும் நுட்பமுறைகளையும் பயன்படுத்தும் திறன்
* வெளியின் மீது அர்த்தபுஷ்டியாக இடப்படுத்துதலும் ஒட்டுமொத்த முழுநிறைவும்

• **நிலத்தோற்றச் சித்திரங்கள்**

10-11 ஆம், 12-13 ஆந் தர மாணவ மாணவியர் நிலத்தோற்றச் சித்திரம் வரைதல் திறந்த நிகழ்ச்சியாகும். இங்கு 12-13 ஆந் தர மாணவ மாணவியருக்கு முதன்மையான இரண்டு போட்டி நிகழ்ச்சிகள் உள்ளன. மாகாணத்தில் இருந்து தேசிய மத்தியத்தத்திற்கு அனுப்பப்படும் 09 மாகாணங்களையும் சேர்ந்த ஆக்கங்கள் தேசிய மட்டத்தில் முதனிலை மத்தியத்தம் மூலம் 10-11 ஆம் தரங்களில் வெற்றியடைந்த 60 உம் 12-13 ஆம் தரங்களில் நிலத்தோற்றத்தைப்பார்த்து வரைந்த ஆக்கங்கள் 60 உம் நிலத்தோற்ற ஆக்கங்கள் பிரிவில் ஆக்கங்கள் 30 உம் தெரிவு செய்யப்பட்டு, இறுதிச்சுற்றுக்கு அழைக்கப்படுவர். மாகாணசுற்றில் மாணவர்களை அழைத்து சித்திரம் வரைவது இடம்பெறாது. அங்கு நிலத்தோற்றத்தை அதே வகையில் பார்த்து வரைதலுக்கும் தாம் காணும் நிலத்தோற்றத்தைத் தமது விருப்பப்படி ஆக்கபூர்வமாக மாற்றியமைத்து வரைதலுக்கும் சந்தர்ப்பமளிக்கப்படும். அட்டவணை ; 3.2 இன்படி, நிலத்தோற்றத்தை அதே வகையில் பார்த்து வரையும்போது அதற்காக நீர் வர்ணம், திட ஊடகம் மற்றும் கலப்பு ஊடகம் ஆகிய

03 பிரிவுகளின் கீழ் போட்டியிடுவதற்கும் நிலத்தோற்றத்தை ஆக்கபூர்வமாக மாற்றியமைத்து வரைவதற்கும் தாம் விரும்பிய ஊடகத்தைப் பயன்படுத்திப் சமர்ப்பிப்பதற்குச் சந்தர்ப்பமளிக்கப்படும். 10 ஆம் 11ஆந் தரங்களைச் சேர்ந்த மாணவ மாணவியர்கள் நிலத்தோற்றத்தை அதே வகையிலேயே வரைவது அவசிய மாவதோடு, அதற்காகத் தாம் விரும்பிய யாதேனும் ஊடகத்தைப் பயன்படுத்தச் சந்தர்ப்பமளிக்கப்படும். ஆக்க பூர்வமான நிலத்தோற்றம் வரையும் போது காணப்படும் நிலத்தோற்றத்தின் வர்ண ரேகைகள் அடங்கிய கலைத்துவக் கோட்பாடுகளுக்கு வெளியே தமது விருப்பின் பிரகாரம் புதிய ஆக்க பூர்வமான பாணியொன்றை கட்டியெழுப்பி ஆக்கம் சமர்ப்பித்தல் இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

நியமங்கள்:

- தெரிவு செய்த காட்டியைத் தளத்தின் மீது அர்த்தபுஷ்டியாக வரைதல்
- கோட்பாடுகளின் பயன்பாடு
- ஊடகத்தையும் நுட்பமுறைகளையும் பயன்படுத்தும் திறன்
- நுணக்கமான இயல்புகளைக் காட்டல்
- புதுமைப்பாடான, அர்த்தபுஷ்டியான வெளிப்பாடு

- **நிலத்தோற்றம் ஆக்க பூர்வமானது.**

- தெரிவு செய்த நிலத்தோற்றத்தினை தளத்தின் மீது வரைதல்.
- வடிவச்சுருக்கத்திற்கு பயன்படுத்திய மாதிரியை காட்டியுள்ள விதம்
- வர்ண ஊடகம் மற்றும் நுட்பங்களின் பொருத்தப்பாடு மற்றும் அழகு
- சுரக்க ஒத்திசைவைக்காட்டல் மற்றும் இயல்புகளின் நுட்பத்தை வெளிப்படுத்தல்.
- புதுமை மற்றும் கருத்துள்ள வெளிப்பாடு.

- பொருள்பார்த்து வரைதல்

10-11 ஆம் மற்றும் 12-13 ஆம் தர மாணவ மாணவியர்கள் பொருள் பார்த்து வரையும் போட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றலாம். இதன்போது போட்டியாளர்களுக்கு வழங்கப்படும் பொருள் தொகுதியைப் பார்த்து வரைதல் வேண்டும். 12-13 ஆந் தரங்களுக்கான இப் போட்டி நிகழ்ச்சிக்காக, நீர் வர்ணம், திட ஊடகம் கலப்பு ஊடகம் ஆகிய பிரிவுகளின் கீழ் போட்டியிடலாம். இப்போட்டி நிகழ்ச்சிகளுக்காகப் பின்வரும் நியமங்களை அடிப்படையாகக் கொள்ளல் வேண்டும்.

நியமங்கள்:

- தரப்பட்ட பொருள் தொகுதியைத் தளத்தின் மீது பொருளுள்ள வகையில் திரட்டாக வரைதல்.
- பொருள்களை அளவுப் பிரமாணப்படி காட்டுதலும் அவற்றின் இயல்புகளை வெளிக்காட்டுதலும்
- கோட்பாடுகளின் பயன்பாடு (தூரநோக்கு, முப்பரிமாண இயல்பு, கண்மட்டம்)
- ஊடகத்தையும் நுட்பமுறைகளையும் பயன்படுத்தும் திறன்
- சித்திரத்தின் பின்னணியும் முழுநிறைவும்

- வடிவமைப்பு ஆக்கம்

தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையிலான மாணவ மாணவியர் இப்போட்டி நிகழ்ச்சி களில் பங்குபற்றலாம். 6-11 ஆந் தரங்களுக்கான வடிவமைப்புச் சித்திரங்கள், பரந்த வடிவமைப்பு, முழுத்தள வடிவமைப்பு, கீற்று வடிவமைப்பு என்றவாறு வரையறுக்கப்படும். 12-13 ஆந் தரங்களுக்கான அவ்வடிவமைப்பு ஆக்க நிகழ்ச்சிகள் மீண்டும் இரண்டு பிரிவுகளில் அடங்கும்.

1. பாரம்பரியமான வடிவமைப்புக்கள்:
   (உள்நாட்டு, வெளிநாட்டு, பாரம்பரிய அலங்கரிப்பு அலகுகளைத் தழுவியவை.)

2. புதிய ஆக்கபூர்வமான வடிவமைப்பு: (பாரம்பரியமான அலங்கரிப்பு அலகுகளையும் கூட ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தலாம்.)

இந்த இரண்டு போட்டி நிகழ்ச்சிகளுக்காகவும் பரந்த வடிவமைப்பு, முழுத்தள வடிவமைப்பு, கீற்று வடிவமைப்பு ஆக்கங்களை முன்வைக்கலாம். அவ்வாறே இந்த இரண்டு போட்டி நிகழ்ச்சிகளுக்காகவும் விரும்பிய ஊடகத்தைப் பயன்படுத்தி ஆக்கங் களை முன்வைக்கச் சந்தர்ப்பம் உண்டு. இந்த எல்லாப்போட்டி நிகழ்ச்சிகளுக்காவும் பின்வரும் நியமங்களை அடிப்படையாகக் கொள்ளல் வேண்டும்.

நியமங்கள்:

- ஆக்கக் கருமத்துக்குப் பொருத்தமானவாறு புதுமைப்பாட்டுடன் திட்டமிடல்.
- பயன்பாட்டுத் தேவைகளுக்குப் பொருத்தமானதாக இருத்தலும் கைத்தொழிலுக்கு ஏற்றதாகவும் இருத்தல்.
- கோடுகள் (இரேகைகள்), தளவடிவங்களைப் பொருளுள்ளவாறு பயன்படுத்தும் திறன்.
- பொருத்தமான நிறங்களைத் தெரிவு செய்துகொள்ளும் திறனும் ஊடகத்தைப் பயன் படுத்தும் திறனும்.
- வியத்தகுதன்மை, நுணுக்கமான ஆக்கத்திறன், வெற்றிகரமான பூரணத்துவம்

- **கிராபிக்குச் (வரைவியல்) சித்திர ஆக்கங்கள் (சுவரொட்டிச் சித்திரம், புத்தக அட்டை, விளக்கப்படச் சித்திரம், காட்டூன் ஆக்கங்கள்)**

சுவரொட்டி (போஸ்டர்) சித்திரங்கள், புத்தக அட்டைகள், விளக்கப்படச் சித்திரங்கள், ஆகியவை இதில் அடங்கும். 10-11 மற்றும் 12-13 ஆம் தர மாணவ மாணவியர் இப்போட்டி நிகழ்ச்சியை விரும்பிய ஊடகத்தினைப் பயன்படுத்தி முன்வைக்கலாம். இந்த சித்திர ஆக்கங்களை மதிப்பீடு செய்வதற்காகப் பின்வரும் நியமங்களை அடிப்படையாகக் கொள்ளல் வேண்டும்.

நியமங்கள்:

- ஆக்கக் கருமத்துக்குப் பொருத்தமானவாறு புதுமைப்பாட்டுடன் திட்டமிடல்.
- வணிக மற்றும் தொடர்பாடல் தேவைகளுக்காகப் பொருத்தமானதாக இருத்தலும் கைத்தொழிலுக்கு ஏற்றதாக இருத்தலும்
- கோடுகள் (இரேகைகள்), தளவடிவங்களைப் பொருளுள்ளவாறு பயன்படுத்தும் திறன்.
- பொருத்தமான நிறங்களைத் தெரிவு செய்துகொள்ளும் திறனும் ஊடகத்தைப் பயன்படுத்தும் திறனும்
- கவர்ச்சித் தன்மையும் வெற்றிகரமான முழுநிறைவும்.

- **காட்டூன் சித்திரம் (வர்ணம்)**

ஹாஷ்யத்தையும் பாத்திரப் பண்புகளையும் வெளிக்காட்டும் ஆக்கங்கள் இப்பிரிவில் அடங்கும். தரம் 10-11, தரம் 12-13 ஆகியவற்றுக்காக இப்போட்டி நிகழ்ச்சியில் தாம் விரும்பிய ஊடகத்தில் ஆக்கங்களை முன்வைக்கச் சந்தர்ப்பம் உண்டு. எவரேனும் நபருக்கோ, சம்பவத்துக்கோ, மதத்துக்கோ, இனத்துக்கோ இழிவை ஏற்படுத்தும் வகையிலான ஆக்கங்களை முன்வைக்கலாகாது. ஆவ்வாக்கங்களை மதிப்பீடு செய்வதற்காக பின்வரும் நியமங்கள் அடிப்படையாக கொள்ளப்படும்.

நியமங்கள்:

- உள்ளடக்கம்/விடயப்பொருளுக்கு அமைவான பாத்திரப்படைப்பு
- வெளியின்மீது உருவங்களை வரைதல்
- ஹாஷ்யத்தன்மையும் நடத்தைப் பண்புகளின் வெளிப்பாடும்
- ஊடகத்தையும் நுட்பமுறைகளையும் பயன்படுத்தும் திறனும்

* ஒட்டுமொத்த ஆக்கத்திறன் வெற்றியும் நுணுக்கமான முழுநிறைவும்

* **கணினிச் சித்திரங்கள்**

சிரேட்ட இடைநிலைப் பிரிவுப் போட்டியாளர்கள் மாத்திரம் கணினியினால் பேண்ட், கொரல்ட்ரோ (Coreldraw), போட்டோசொப் (Photoshop), இல்லஸ்ட்ரேடர் (Illustrator), மென்பொருள் களைப் பயன்படுத்தி பயன்பாட்டுப் பண்டமொன்றின் விற்பனை மேம்பாட்டுக்கான அச்சிடுவதற்கேற்ற விளம்பர அறிவித்தலொன்றினை A4 அளவுடையதாக வரைந்து அதில் வர்ண அச்சுப் பிரதியொன்றினைப் போட்டிக்கு முன்வைத்தல் வேண்டும். வலய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவ – மாணவரியரை கணினிக் கூடம் உள்ள பாடசாலையொன்றில் அல்லது மாகாண கணினி நிலையமொன்றுக்கு அழைத்து போட்டிகளை நடத்தும்போது கணினிப் பாடத்துக்குப் பொறுப்பான ஓர் அதிகாரியின் துணையைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். இவற்றுள் எந்தப் போட்டி நிகழ்ச்சிக்காகவும் இணைய (Internet) வசதியைப் **பயன்படுத்தலாகாது.** கல்வி வலயம் மற்றும் மாகாண மட்டத்தில் வழங்கப்படும் கணினிச் சாதனங்கள் தவிர்ந்த வேறு மென்பொருள்களையோ வன்பொருள்களையோ **பயன்படுத்தலாகாது.** இந்த ஆக்கங்களை மதிப்பிடுவதற்காக பின்வரும் நியமங்கள் அடிப்படையாக கொள்ளப்படும்.

நியமங்கள்:

* உள்ளடக்கம்/விடயப்பொருள்
* வணிக மற்றும் தொடர்பாடல் தேவைகளுக்கு ஏற்றதாக இருத்தல்.
* கோடுகள் (இரேகைகள்), தளவடிவங்களைப் பொருளுள்ளவாறு பயன்படுத்தல்.
* பொருத்தமான நிறங்களைத் தெரிவு செய்துகொள்ளும் திறனும் ஊடகத்தைப் பயன்படுத்தும் திறனும்.
* கவர்ச்சித்தன்மையும் வெற்றிகரமான முழுநிறைவும்.

08. போட்டி நிகழ்ச்சிக்கான வெற்றிகளை வழங்குதல்.

அட்டவணை இல 8.1

| தரம் | போட்டி நிகழ்ச்சி | தங்க விருது | வெள்ளி விருது | வெண்கல விருது | ஞாபகர்த்த விருது | சிறப்பு விருது | மொத்த விருதுகள் தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கருத்து வெளிப்பாடு | 03 | 03 | 03 | 05 | 25 | 39 |
| 2-3 | கருத்து வெளிப்பாடு | 03 | 03 | 03 | 05 | 55 | 69 |
| 4-5 | கருத்து வெளிப்பாடு | 03 | 03 | 03 | 05 | 55 | 69 |
| 6-7 | கருத்து வெளிப்பாடு | 03 | 03 | 03 | 05 | 55 | 69 |
| | வடிவமைப்பு | 03 | 03 | 03 | 05 | 55 | 69 |
| 8-9 | கருத்து வெளிப்பாடு | 03 | 03 | 03 | 05 | 55 | 69 |
| | வடிவமைப்பு | 03 | 03 | 03 | 05 | 55 | 69 |
| 10- | கருத்துவெளிப்பா | 03 | 03 | 03 | 05 | 55 | 69 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 11 | டு | | | | | | |
| | பாரம்பரிய சித்திரங்களைத் தழுவிய புதிய ஆக்கம் | 03 | 03 | 03 | 05 | 25 | 39 |
| | வடிவமைப்பு | 03 | 03 | 03 | 05 | 55 | 69 |
| | கிரபிக்கு (வரைவியல்) | 03 | 03 | 03 | 05 | 25 | 39 |
| | நிலத்தோற்றம் | 03 | 03 | 03 | 05 | 25 | 39 |
| | பொருள் பார்த்து வரைதல் | 03 | 03 | 03 | 05 | 55 | 69 |
| | காட்டூன் சித்திரம் | 03 | 03 | 03 | 05 | 25 | 39 |
| | கணினி தொடர்பான ஆக்கம் | 03 | 03 | 03 | 05 | 10 | 24 |

அட்டவணை இல 8.2

| தரம் | போட்டி நிகழ்ச்சி | ஊடகம் | முதலாம் | இரண்டாம் | மூன்றாம் | ஞாபகர்த்த விருது | சிறப்பு விருது | மொத்த விருதுகள் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 12-13 | கருத்து வெளிப்பாடு | நீர் வர்ணம் | 01 | 01 | 01 | 02 | 15 | 20 |
| | | பஸ்ரல், ஏனைய | 01 | 01 | 01 | 02 | 15 | 20 |
| | | கலப்பு, கொலாஜ் | 01 | 01 | 01 | 02 | 15 | 20 |
| | பாரம்பரியச் சித்திரங்களைத் தழுவிய புதிய ஆக்கம் | விரும்பிய ஊடகம் | 01 | 01 | 01 | 02 | 55 | 60 |
| | மார்பளவு மனித உருவம் (உருவப்படம்) | விரும்பிய ஊடகம் | 01 | 01 | 01 | 02 | 55 | 60 |
| | நிலத்தோற்றம் - பார்த்து வரைதல் | நீர் வர்ணம் | 01 | 01 | 01 | 02 | 15 | 20 |
| | | பஸ்ரல், ஏனைய | 01 | 01 | 01 | 02 | 15 | 20 |
| | | கலப்பு, கொலாஜ் | 01 | 01 | 01 | 02 | 15 | 20 |
| | நிலத்தோற்றம் | விரும்பி | 01 | 01 | 01 | 02 | 25 | 30 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | - ஆக்கபூர்வமானது | ய ஊடகம் | | | | | | |
| | பொருள் பார்த்து வரைதல் | நீர் வர்ணம் | 01 | 01 | 01 | 02 | 15 | 20 |
| | | பஸ்ரல், ஏனைய | 01 | 01 | 01 | 02 | 15 | 20 |
| | | கலப்பு, கொலாஜ் | 01 | 01 | 01 | 02 | 15 | 20 |
| | பாரம்பரிய வடிவமைப்பு | விரும்பிய ஊடகம் | 01 | 01 | 01 | 02 | 55 | 60 |
| | புதிய ஆக்கபூர்வ வடிவமைப்பு | விரும்பிய ஊடகம் | 01 | 01 | 01 | 02 | 55 | 60 |
| | புத்தக அட்டை, பொதி உறை, மேலுறை | விரும்பிய ஊடகம் | 01 | 01 | 01 | 02 | 25 | 30 |
| | விளக்கப்படச் சித்திரம் | விரும்பிய ஊடகம் | 01 | 01 | 01 | 02 | 25 | 30 |
| | சுவரொட்டிச் சித்திரம் | விரும்பிய ஊடகம் | 01 | 01 | 01 | 02 | 25 | 30 |
| | காட்டூன் சித்திரம் | விரும்பிய ஊடகம் | 01 | 01 | 01 | 02 | 15 | 20 |
| | கணினிச் சித்திரம் | கணினிப் பயன்பாடு | 01 | 01 | 01 | 02 | 15 | 20 |

அட்டவணை இல 8.3

| விஷேட பிரிவு | போட்டி நிகழ்ச்சி | தங்க விருது | வெள்ளி விருது | வெண்கல விருது | சிறப்பு விருது |
|---|---|---|---|---|---|
| 4 வருடம் 9 மாதம் - 10 வருடம் பார்வை சார்ந்த குறைபாடு | 29. கருத்து வெளிப்பாடு சித்திரம் | 03 | 03 | 03 | 10 |
| 10 - 16 வருடம் பார்வை சார்ந்த குறைபாடு | 30. கருத்து வெளிப்பாடு சித்திரம் | 03 | 03 | 03 | 10 |
| 16 - 21 வருடம் பார்வை சார்ந்த குறைபாடு | 31. கருத்து வெளிப்பாடு சித்திரம் | 03 | 03 | 03 | 10 |
| 4 வருடம் 9 மாதம் - 10 வருடம் அறிவு | 32. கருத்து வெளிப்பாடு சித்திரம் | 03 | 03 | 03 | 10 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சார்ந்த தேவை | | | | | |
| 10 - 16 வருடம் அறிவு சார்ந்த தேவை | 33. கருத்து வெளிப்பாடுச் சித்திரம் | 03 | 03 | 03 | 10 |
| 16 - 21 வருடம் அறிவு சார்ந்த தேவை | 34. கருத்து வெளிப்பாடுச் சித்திரம் | 03 | 03 | 03 | 10 |
| 4 வருடம் 9 மாதம் - 10 வருடம் வேறு | 35. கருத்து வெளிப்பாடுச் சித்திரம் | 03 | 03 | 03 | 10 |
| 10 - 16 வருடம் வேறு | 36. கருத்து வெளிப்பாடுச் சித்திரம் | 03 | 03 | 03 | 10 |
| 10 - 21 வருடம் வேறு | 37. கருத்து வெளிப்பாடுச் சித்திரம் | 03 | 03 | 03 | 10 |

3.1 மற்றும் 3.2 அட்டவணையின் பிரகாரம் தேசிய மத்தியத்திற்கு அனுப்பபட்ட அந்த அந்த ஆக்க எண்ணிக்கையின் பிரகாரம் தேசிய சுற்றில் தெரிவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வெற்றியாளர் தொகை மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. தரம் 1 இலிருந்து 11 வரை அட்டவணை இல 08.1 இலும் தரம் 12-13 வரை இடம்பெறும் போட்டி நிகழ்ச்சி அட்டவணை இல 08.2 இலும் விஷேட பிரிவு அட்டவணை இல 08.3 இலும் காட்டப்படுகின்றது.

குறிப்பு :- தரம் 12 மற்றும் 13 இற்காக இடம்பெறும் போட்டி நிகழ்ச்சிகளின் அடிப்படையில் வெற்றியாளர் தெரிவு செய்யப்படுவர்.

**09. போட்டி நிபந்தனைகள்**

9.1 முன்வருதலும் பங்குபற்றுதலும்

9.2 அரச பாடசாலை மாணவ மாணவியர்களுக்கும் கல்வி அமைச்சினால் அனுமதிக்கப்பட்ட தனியார் பாடசாலை மாணவ மாணவியர்களுக்கும் சகல பிரிவெனாக் கல்வி நிலைய மாணவ மாணவியருக்கும் பயில்நிலைப் பிக்குமார்களுக்கும் சர்வதேச பாடசாலைகளுக்கும் இப்போட்டிகளில் பங்கு பற்றலாம்.

9.3 சகல சித்திர ஆக்கங்களும் 18x14 அங்குல (45cm x 35cm) அளவுடையதாக இருத்தல் வேண்டும். கணினியின் துணையுடன் வரையப்படும் கிராபிக்குச் சித்திர ஆக்கம் A4 வர்ண அச்சுப் பிரதியாக இருத்தல் வேண்டும். காட்டூன் சித்திரங்கள் A3 அளவுடையதாக இருத்தல் வேண்டும்.

9.4 முதலாம் கட்டத்தில் பாடசாலை மட்டத்திலும் வலய மட்டத்திலும் மாணவ மாணவிகள் தாம் விரும்பிய யாதேனும் தலைப்பின் கீழ் ஆக்கத்தை முன்வைக்கலாம். கல்வி அமைச்சினால் நடாத்தப்படும் தேசிய மட்டத்திலான இறுதிப் போட்டியின் போது சகல போட்டி நிகழ்ச்சிகளுக்குமான தலைப்புக்கள் கல்வி அமைச்சினால் வழங்கப்படும். கொழும்பு நகருக்கு அண்மையில் இடம் பெறும் இப்போட்டியின் சகல ஆக்கங்களும் தேசிய சுற்று மத்தியத்துக்காக அனுப்பப்படும்.

9.5 தேசியப் போட்டியின் போது நிலத்தோற்றச் சித்திரம் வரைதல் தவிர்ந்த மற்றைய சகல ஆக்கப்போட்டி நிகழ்ச்சிகளையும் 6.1 இன் கீழ்த் தரப்பட்டுள்ள ஜுலை 12 ஆந்திகதி முற்பகல் 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணிவரை கொழும்பு நகருக்கு அண்மையில் உள்ள பாடசாலையொன்றில் இடம்பெறும்.

9.6 நிலத்தோற்ற சித்திரம் வரையும் இறுதிப் போட்டி நிகழ்ச்சிகளை நடத்தும் பொறுப்பு கல்வி அமைச்சைச் சார்ந்தது. அப்போட்டி நிகழ்சசிகள் 6.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தெரிவு செய்யப்பட்ட ஒரு நிலையத்தில் கல்வி அமைச்சினால் ஒழுங்கு செய்யப்படும்.

9.7 வலய மட்டத்தில் சித்திர ஆக்கங்களுக்காக, 9.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள அளவுடைய யாதேனும் வரைதல் தாள் வகையைப் பயன்படுத்தலாம். எனினும் இறுதிப் போட்டிக்கான வரைதல் தாள்கள் கல்வி அமைச்சினால் வழங்கப்படும். எனினும் போட்டியாளர் தாம் பங்குபற்ற எதிர்பார்க்கும் போட்டி நிகழ்ச்சிக்குத் தேவையான வரைதல் ஊடகத்தைத் தாமே கொண்டு வருதல் வேண்டும். தேசிய மட்டப் போட்டி இடம் பெறும் திகதியிலேயே சகல போட்டி நிகழ்ச்சிகளுக்குமான சித்திரம் வரையும் தலைப்புக்கள் வழங்கப்படும்.

9.8 தரம் 1-13 வரை மற்றும் விஷேட தேவையுடன் கல்வி கற்கும் ஒரு மாணவன்/ மாணவிக்கு, அத்தரத்தின் போட்டிகளுள் தாம் மிகவும் விரும்பும் ஒரு போட்டி நிகழ்ச்சிக்காக மாத்திரமே பங்குபற்ற முடியும்.

விஷேட பிரிவு மாணவ மாணவிகளின் போட்டிக்கு தேசிய மட்டத்தில் அவர்கள் அழைக்கப்பட்டு, சித்திரம் வரைதல் இடம்பெற மாட்டாது. எனினும் அவர்கள் வலயமட்டப் போட்டியின் போது பாடசாலை மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் போட்டி நடக்கும் இடத்துக்கு அழைக்கப்பட்டு சித்திரம் வரைதல் இடம் பெறுதல் வேண்டும். அவர்களுக்கு விரும்பிய தலைப்பொன்றின் கீழ் 18x14 அங்குல அளவு சித்திர ஆக்கத்திற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுதல் வேண்டும். தேசிய மட்ட மத்தியத்துக்காக மதிப்பீடு செய்யப்படுவது வலயத்திற்கு அழைக்கப்பட்டு வரையப்பட்ட ஆக்கங்களையே ஆகும்.

## 10. சான்றிதழ் வழங்குதலும் பின்னூட்டலும்

தரம் 1-11 வரை மற்றும் விஷேட பிரிவுக்கு தங்க, வெள்ளி, வெண்கல விருது என்றவாறாகவும் தரம் 12-13 இற்காக, முதலாம், இரண்டாம், மூன்றாம் என்றவாறாகவும் ஏனைய விருதுகள் ஞாபகர்த்த விருது, சிறப்பு விருது என்றவாறாகவும் ஒழுங்கு செய்யப்பட்டு, சித்திரக் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் உரிய ஆண்டிலே நடத்தப்படும். சிறப்பு விருது சான்றிதழ்கள் உரிய மாகாணக் கல்விப் பணிப்பாளர்களினால் அந்தந்தப் பாடசாலைகளக்கு வழங்கப்படும். பரிசளிப்பின்போது, இறுதித் தேசிய மட்டப் போட்டியில் வெற்றி பெற்றோரின் ஆக்கங்களை உள்ளடக்கிய ஞாபகார்த்த மலர் ஒன்றும் கல்வி அமைச்சினால் வெளியிடப்படும்.

இப்போட்டிகளுக்காக பங்குபற்றும் சகல போட்டியாளர்களும் சுற்றுநிருபத்தின்படி விதிமுறைகளை பின்பற்றுவதோடு, மத்தியஸ்தர்களின் தீர்ப்பே இறுதியானது என்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

என்.எச்.எம். சித்ரானந்த,
செயலாளர்,
கல்வி அமைச்சு

**N.H.M. Chitrananda**
Secretary
Ministry of Education
"Isurupaya" Pelawatta,
Battaramulla.

இணைப்பு 01

மாணவர்களுக்கானமாதிரிவிண்ணப்பப்படிவம்

**அகில இலங்கைபாடசாலைசிறுவர் சித்திரப் போட்டி 2020**

01. மாணவன்/மாணவியின் முழுப்பெயர் : ..............................................................................

முதலெழுத்துக்களுடன் பெயர் : ..............................................................................

(முதலெழுத்துக்கள் ஆங்கிலகெப்பிட்டல் எழுத்துக்களில் குறிப்பீடுக)

02. பாடசாலையின் பெயர்,முகவரிமற்றும் இலக்கம்

..............................................................................

..............................................................................

தொலைபேசி இலக்கம்..............................................

03. தனிப்பட்டமுகவரி..............................................................................

..............................................................................

தொலைபேசி இலக்கம் ..............................................

04. மாகாணம் ..............................................................................

05. கல்விவலயம் ..............................................................................

06. போட்டியிடும் பிரிவு..............................................................................

07. போட்டியிடும் படைப்பிற்கானஊடகம்..............................................................................

08. படைப்பிற்கானதலைப்பு..............................................................................

09. கல்விகற்கும் வகுப்பு..............................................................................

10. சித்திரப் பாடஆசிரியரின் பெயர் ..............................................................................

தொலைபேசி இலக்கம் ..............................................

திகதி........................................ மாணவன்/ மாணவியின் கையொப்பம்.....................

அதிபரின் சிபாரிசு:

இத்துடன் இணைக்கப்பட்டுள்ளபடைப்புமேற்படிமாணவன்/ மாணவியின் எனவும்,விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதகவல்கள் யாவும் உண்மையானதுஎனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

.................................................... ....................................

அதிபரின் பெயர் கையொப்பம்

திகதி.............................

பதவிமுத்திரை

இணைப்பு 02

மாணவர்களுக்கானமாதிரிவிண்ணப்பப்படிவம்

**அகில இலங்கைபாடசாலைச்சிறுவர் சித்திரப் போட்டி 2020.**

01. மாணவன்/மாணவியின் முழுப்பெயர் : ..................................................................................

முதலெழுத்துக்களுடன் பெயர் : ..................................................................................

(முதலெழுத்துக்கள் ஆங்கிலகெப்பிட்டல் எழுத்துக்களில் குறிப்பீடுக)

02. பாடசாலையின் பெயர்,முகவரிமற்றும் இலக்கம்

..................................................................................

..................................................................................

தொலைபேசி இலக்கம் ...............................................

03. தனிப்பட்டமுகவரி..................................................................................

..................................................................................

தொலைபேசி இலக்கம் ...............................................

04. மாகாணம் ..................................................................................

05. கல்விவலயம் ..................................................................................

06. போட்டியிடும் பிரிவு..................................................................................

07. போட்டியிடும் படைப்பிற்கானஊடகம் ..................................................................

08. படைப்பிற்கானதலைப்பு..................................................................................

09. கல்விகற்கும் வகுப்பு..................................................................................

10. சித்திரப் பாடஆசிரியரின் பெயர் ..................................................................

தொலைபேசி இலக்கம் ...............................................

திகதி........................................ மாணவன்/ மாணவியின் கையொப்பம் .....................

**வலயக் கல்விப் பணிப்பாளரின்சிபாரிசு:**

இத்துடன் இணைக்கப்பட்டுள்ளபடைப்புமேற்படிமாணவன்/ மாணவியின் எனவும்,விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதகவல்கள் யாவும் உண்மையானதுஎனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

..................................................... ......................................

வலயக் கல்விப் பணிப்பாளரின்பெயர் கையொப்பம்

திகதி.............................. பதவிமுத்திரை